# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் டிசம்பர் மாத சிறப்பு அவசரக்கூட்டம் 11.12.2020 ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மாவட்ட ஆட்சியர் மற்றும் பிற துறைகளால் நடத்தப்படும் பெரும்பாலான ஆய்வு கூட்டங்கள் காணொளி காட்சி மூலம் நடைபெறுவதால், இந்நகராட்சி ஆணையரின் பயன்பாட்டிற்கான கணினியில் நிறுவுவதற்கு Web Camera மற்றும் Speaker வினியோகம் செய்வதற்காக விலைப்புள்ளி கோரப்பட்டதில், 08.12.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Act Automation,<br>174,S.K.P Building,<br>Opp.Union Bank of India,<br>M.S Road, Vadasery | Live Tech speaker SP08 1 Unit Rs - 750<br>TVS WC - 103 Web Camera HD 108 OP 1 Unit } Rs. - 1450<br>**Total Rs - 2200** |
| 2. | M/s.Data Unit,<br>No.181, Classic Complex,<br>Opp.Anna Stadium,<br>Nagercoil | Live Tech speaker 1Qty - 1000<br>TVS WC - 103 Web Camera 1 Qty. - 1450<br>**Total Rs - 2200** |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில், M/s.Act Automation, Vadasery நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வினியோக உத்தரவு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.6805/2010/இ1

**தீர்மானம் எண்.2425 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சி கணினிகளில் நிறுவியிருந்த Antivirus Software காலாவதியாகி உள்ள நிலையில், தற்போது அனைத்து பணிகளும் Online மூலம் நடைபெற்று வருவதால், Antivirus அவசியம் நிறுவப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, மூன்று வருங்களுக்கான Antivirus software வினியோகம் செய்வதற்கு, விலைப்புள்ளி கோரப்பட்டதில், 08.12.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Act Automation,<br>174,S.K.P Building,<br>Opp.Union Bank of India,<br>M.S Road, Vadasery | K7 Total Security 1 user<br>3 years Pack / unit - Rs.950/- |
| 2. | M/s.Data Unit,<br>No.181, Classic Complex,<br>Opp.Anna Stadium,<br>Nagercoil | K7 Total Security 3 years<br>Pack 1 user / 1 Qty - Rs.1150/- |

| | | |
|---|---|---|
| **3** | M/s. ACE Systems,<br>No.5, New port street,<br>WCC Road, Nagercoil | K7 Total Security 1 user<br>Validity 3 years / 1 Qty - Rs.1200/- |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில், M/s.Act Automation, Vadasery நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வினியோக உத்தரவு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3124/2014/AP

**தீர்மானம் எண்.2426 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம்: 2020-21-ன் கீழ், ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு, மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். **20557/2020/இ3** நாள் **11.12.2020** தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் திட்டத்தின் கீழ் சாலை மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு,

| **நகராட்சியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)** | **சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ. கோடியில்)** | **நகராட்சி பங்களிப்பு (ரூ. கோடியில்)** |
|---|---|---|---|
| குளச்சல் | 3.00 | 2.70 | 0.30 |

மேற்காணும் நிதி ஒதுக்கீட்டு விவரம் மன்றத்தின் பார்வைக்கும், மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள சாலைப்பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **சாலையின் நீளம் (கி.மீ)** | **சாலையின் அகலம் (மீ)** | **மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| 1 | **சிப்பம் எண்.1**<br>குளச்சல் நகராட்சி - வார்டு எண்.1-ல் பவுண்டரி சாலையில் கார்மல் ஜோதி பள்ளிக்கூடத்தின் அருகிலிருந்து சாஸ்தான்கரை பிரதான சாலை வரை, வார்டு எண்.3-ல் குளச்சல் கடை சாலை முதல் விவேகானந்தர் சாலை வரை பேவர் இயந்திரத்தை பயன்படுத்தி தார் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.1-ல் ஜெயபால் காம்பவுண்ட் சாலை, பண்டாரவிளை முதல் வலியவிளை சாலை மற்றும் பவுண்டரி சாலையில் கால்நடை மருத்துவமனை அருகில் உள்ள குறுக்குத் தெரு ஆகியவற்றில் பேவர் பிளாக் தளம் அமைத்தல்.. | 2.040 | 4.30 | 100.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | **சிப்பம் 2**<br>குளச்சல் நகராட்சி - வார்டு எண்.17-ல் சிங்கன்காவு குறுக்குத்தெரு, வார்டு எண்.21-ல் இக்பால் தெரு, வார்டு எண்.22-ல் பந்தவிளை சாலை மற்றும் வார்டு எண்.23-ல் புல்லன்விளை சாலை ஆகியவற்றில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 1.770 | 4.00 | 100.00 |
| 3 | **சிப்பம் 3**<br>குளச்சல் நகராட்சி - வார்டு எண் 5,6,7-ல் கொட்டில்பாடு தெரு, வார்டு எண்.8,9-ல் மரமடி தெரு, வார்டு எண்.12,13-ல் துறைமுகத்தெரு, வார்டு எண்.15-ல் மாதா காலனி பள்ளிக்கூடம் சாலை, வார்டு எண்.7-ல் சிங்காரவேலன் காலனி சாலை, வார்டு எண்.17-ல் பழைய சந்தை செல்லும் சாலை மற்றும் வார்டு எண்.21-ல் காவடிவிளை சாலை ஆகியவற்றில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 1.435 | 4.00 | 100.00 |
| | **மொத்தம்** | **5.245** | **-** | **300.00** |

ந.க.எண்.1246/2020/இ1

**தீர்மானம் எண்.2427 அனுமதிக்கப்படுகிறது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் டிசம்பர் மாத சிறப்பு அவசரக்கூட்டம் 17.12.2020 ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை செயல்முறைகள் **ந.க.எண்.20557/2020/இ3** நாள் **14.12.2020-ன்** படி, குளச்சல் நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம்: 2020-21-ன் கீழ், ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 சிப்பம் சாலைப்பணிகளை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**நிதி பங்கீட்டு விவரம்** :

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ. கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| குளச்சல் | 3.00 | 2.70 | 0.30 |

அதன் அடிப்படையில் கீழ்காணும் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | **சிப்பம் எண்.1** குளச்சல் நகராட்சி - வார்டு எண்.1-ல் பவுண்டரி சாலையில் கார்மல் ஜோதி பள்ளிக்கூடத்தின் அருகிலிருந்து சாஸ்தான்கரை பிரதான சாலை வரை, வார்டு எண்.3-ல் குளச்சல் கடை சாலை முதல் விவேகானந்தர் சாலை வரை பேவர் இயந்திரத்தை பயன்படுத்தி தார் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.1-ல் ஜெயபால் காம்பவுண்ட் சாலை, பண்டாரவிளை முதல் வலியவிளை சாலை மற்றும் பவுண்டரி சாலையில் கால்நடை மருத்துவமனை அருகில் உள்ள குறுக்குத் தெரு ஆகியவற்றில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 2.040 | 4.30 | 100.00 |
| 2 | **சிப்பம் 2** குளச்சல் நகராட்சி - வார்டு எண்.17-ல் சிங்கன்காவு குறுக்குத்தெரு, வார்டு எண்.21-ல் இக்பால் தெரு, வார்டு எண்.22-ல் பந்தவிளை சாலை மற்றும் வார்டு எண்.23-ல் புல்லன்விளை சாலை ஆகியவற்றில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 1.770 | 4.00 | 100.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | **சிப்பம்** 3<br>குளச்சல் நகராட்சி - வார்டு எண் 5,6,7-ல் கொட்டில்பாடு தெரு, வார்டு எண்.8,9-ல் மரமடி தெரு, வார்டு எண்.12,13-ல் துறைமுகத்தெரு, வார்டு எண்.15-ல் மாதா காலனி பள்ளிக்கூடம் சாலை, வார்டு எண்.7-ல் சிங்காரவேலன் காலனி சாலை, வார்டு எண்.17-ல் பழைய சந்தை செல்லும் சாலை மற்றும் வார்டு எண்.21-ல் காவடிவிளை சாலை ஆகியவற்றில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 1.435 | 4.00 | 100.00 |
| | **மொத்தம்** | 5.245 | | 300.00 |

மேற்காணும் விவரங்கள் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1246/2020/இ1

**தீர்மானம் எண்.2428அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்கு, 15-வது மத்திய நிதிக்குழு (15th CFC Tied Grant - Ist Instalment) மானியத்தின் முதல் தவணையில், குடிநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் (Water Supply & Solid Waste Management Sectors) மேற்கொள்வதற்காக ரூ.33,72,482/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையில், கீழ்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| Sl.No | Name of the Work | Estimated Amount (Rs.in Lakh) |
|---|---|---|
| 1. | **Proposed work to be taken under SWM**<br>Supply and Fixing of conveyor belt, Shredder Machine, Incinerator and weighing Machine @ Uppalam Compost yard. | 6.00 |
| 2. | **Proposed work to be taken under Water Supply**<br>(i) Providing 2 Nos. Calyx borewells @ Palathankarai. | 10.00 |
| | **(ii) Providing 160mm PVC Pumping line @ Vellipillayar kovil to Port street 2 lakh litre capacity OHT**. | 19.00 |
| | **Total** | **35.00** |

மேற்படி மதிப்பீடு ரூ.35,00,000/-ல் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.33,72,482/- போக மீதமுள்ள தொகை ரூ.1,27,518/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்படி திட்ட நிதி ஒதுக்கீட்டு விவரம் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும்.

மேற்படி பணிகளுக்கான திட்டநிதி ஒதுக்கீடு போக கூடுதல் தொகை ரூ.1,27,518/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

மேலும், திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசர அவசியம் கருதி, 15-வது மத்திய நிதிக்குழு நிதி ஒதுக்கீட்டின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகளில், வரிசை எண்.1-ல் குறிப்பிடப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.6,00,000/-க்கு தயார் செய்யப்பட்டு, மன்றத் தீர்மானம் எண்.2362 நாள் 30.09.2020-ன் படி ஏற்கனவே மன்ற ஒப்புதல் பெற்று, கடந்த 21.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, திரு.சி.சுரேஷ், ஒப்பந்ததாரருக்கு 02.11.2020-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் நகராட்சி நிதி நிலையின் காரணமாக பணி மேற்கொள்ளப்படாமல் உள்ளது. எனவே மேற்படி பணியினை திட்ட நிதியின் கீழ் மேற்கொண்டு, அதற்கான செலவினத்தை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1429-1/2020/இ1

**தீர்மானம் எண்.2429 அனுமதிக்கப்படுகிறது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் டிசம்பர் மாத சாதாரணக்கூட்டம் 31.12.2020 ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN 74-75P-8399-க்கு பழுதுகள் சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ள 17.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் வடசேரி | ரூ.27895/- |
| 2. | அக்சயா மோட்டார்ஸ், உண்ணாமலைக்கடை | ரூ.28000/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2 ஐ விட வரிசை எண்.1, கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், வடசேரி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்கு.

ந.க.எண்.1406/2014/எச்1

**தீர்மானம் எண்.2430 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19775/ஜே2/2019-3 நாள் 15.12.2020-ல் தெரிவித்துள்ளபடி 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (ஐந்தாவது திருத்தம்) மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 அட்டவணை V-ல் முடிதிருத்தும் நிலையங்கள், அழகு நிலையம், ஸ்பா மற்றும் மசாஜ் நிலையங்களுக்கு தொழில் உரிமையாணை கட்டணம் நிர்ணயம் செய்து உரிமையாணை வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்டுள்ளவாறு இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்டுள்ள நிறுவனங்களுக்கு தொழில் உரிமையாணைக் கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வ. எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டப்பிரிவு (அட்டவணை V) | உரிமையாணை கோரும் தொழில் | அளவு | உரிமையாணைக் காலம் | கட்டண விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 249 | முடிதிருத்தகம் | A)200 ச.அடிக்குள் | 1 வருடம் | ரூ. 200/- |
| | | | B)200 ச.அடிக்கு மேல் | 1 வருடம் | ரூ.500/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 249 | அழகு நிலையம் | -- | 1 வருடம் | ரூ.1000/- |
| 2 | 249 | ஸ்பா | -- | 1 வருடம் | ரூ.2000/- |
| 3 | 249 | மசாஜ் நிலையம் | -- | 1 வருடம் | ரூ.2000/- |

மேற்கண்டவாறு தொழில் உரிமையாணைக் கட்டணம் நிர்ணயம் செய்த விபரத்தினை தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் வெளியிட்டு அதன் விபரத்தினை நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டியுள்ளது.

எனவே அவசர அவசியம் கருதி மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட விபரம் குறித்து பொது மக்கள் கருத்து கேட்டு, பின்பு அரசிதழில் வெளியிடவும், மேலும் தினசரி நாளிதழில் மற்றும் அரசிதழில் விளம்பரம் ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.776/2020/எச்1

**தீர்மானம் எண்.2431 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 75 K 6526-ல் பொருத்தப்பட்டுள்ள டயர்களின் Wheel Alignment, Balancing, Tyre Rotation ஆகிய வாகனம் ஒவ்வெலரு 5000 கிலோ மீட்டர் ஓடிய பின்னர் பரிசோதனை செய்யப்பட்டு, சரி செய்யப்பட வேண்டும் என்பதால், கடந்த செப்டம்பர் 2020-ல் மேற்படி பணிகள் வாகன பராமரிப்பு பணிகளின் போது மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் தற்போது வரை வாகனம் 5000 கிலோ மீட்டருக்கு மேல் ஓடியுள்ளதால், Wheel Alignment, Balancing, Tyre Rotation ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே அதற்கான செலவினம் ரூ.770/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7057-1/2020/இ1

**தீர்மானம் எண்.2432 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 74 K 3530 வாங்கப்பட்டு, 15 ஆண்டுகள் நிறைவு பெற்றதால், மேற்படி வாகனத்தின் தகுதி சான்றினை அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு புதுப்பிப்பதற்காக, மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு Online மூலம் தகுதி சான்று புதுப்பித்தல் கட்டணம் செலுத்தியது, பசுமை வரி செலுத்தியது, புகை பரிசோதனை, சேஸ் பிரிண்ட் ஸ்டிக்கர், சர்வீஸ் கட்டணம், நம்பர் பிளேட் புதிதாக வைத்தல் ஆகியவற்றிற்கான செலவினம் ரூ.3360/- ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.5030/2010/இ1

**தீர்மானம் எண்.2433 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.5

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2-ல் புதுத்தெருவிலிருந்து மதனாவிளை செல்லும் சாலையில் உள்ள சிறுபாலம் உடைந்து போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. மேலும் சி.எம்.சி காலனியில் க.எண்.2/268-ன் அருகில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக புதிதாக அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே புதுத்தெருவில் சிறுபாலம் மற்றும் சி.எம்.சி காலனியில் வடிகால் ஓடை அமைத்தல் பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,20,000/- க்கும், மேற்படி பணிகளை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1427/2020/இ1

**தீர்மானம் எண்.2434 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.6

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் (ம) பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/2383/2020 நாள் 30.11.2020-ன் படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் : 2020-21-ன் கீழ், ரூ.70,000/- மதிப்பீட்டில், காமராஜர் சாலையில் தேசிய இளைஞர் இயக்கம் அருகாமையில், Double Arm Solar light அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 23.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.Volton Engineering, Kaliyakkavilai | மதிப்பீட்டு விகிதம் (ரூ.62,500/-) |
| 2 | M/s.Success Engineering Mancode | மதிப்பீட்டை விட 0.16% குறைவு (ரூ.62,400/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Success Engineering, Mancode நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.16% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.402/2020/இ1

**தீர்மானம் எண்.2435 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.7

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் (ம) பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/2383/2020 நாள் 30.11.2020-ன் படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் : 2020-21-ன் கீழ், ரூ.70,000/- மதிப்பீட்டில், குளச்சல் நகராட்சி - சிங்காரவேலன் காலனி பகுதியில் Double Arm Solar light அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 23.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.Volton Engineering, Kaliyakkavilai | மதிப்பீட்டு விகிதம் (ரூ.62,500/-) |
| 2 | M/s.Success Engineering Mancode | மதிப்பீட்டை விட 0.16% குறைவு (ரூ.62,400/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Success Engineering, Mancode நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.16% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.986/2020/இ1

**தீர்மானம் எண்.2436 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.8

இந்நகராட்சிக்குட்பட்ட தும்பக்காடு பகுதியில் பழுதடைந்துள்ள வடிகால் ஓடையின் மேல்மூடிக்கு மாற்றாக புதிதாக மேல்மூடி அமைத்து, சிமெண்ட் சாலை அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2,60,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2401 நாள் 24.11.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 23.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 2.79% அதிகம் (ரூ.2,29,240/-) |
| 2 | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு (ரூ.2,22,937.20/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1094/2020/இ1

**தீர்மானம் எண்.2437 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.9

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் (ம) பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/3585/2018 நாள் 23.11.2020-ன் படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் : 2018-19-ன் கீழ், ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில், குளச்சல் நகராட்சி - வார்டு எண்.19, நெசவாளர் தெருவில் பழுதடைந்துள்ள

அங்கன்வாடி கட்டிடத்தை அப்புறப்படுத்தி புதிய அங்கன்வாடி அமைத்தல் பணியின் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 23.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு. சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.34% அதிகம் (ரூ.7,52,755/-) |
| 2 | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு (ரூ.7,49,123.62/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.ஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.15% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.400/2020/இ1

**தீர்மானம் எண்.2438 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களை அனுபவித்து கொள்ளும் உரிமங்களுக்கான குத்தகை காலம் 31.03.2021 உடன் முடிவடைவதால் 2020-2021, 2021-222 மற்றும் 2022-2023 முடிய மூன்று ஆண்டுகளுக்கு அரசாணை எண்.181 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள் 19.09.2008-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், பொது ஏல அறிக்கை மன்றத்தின் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **ஏல விபரம்** | **செலுத்த வேண்டிய முன்வைப்புத் தொகை (ரூ)** | **குத்தகை காலம்** |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 2,00,000/- | 01.04.2021 முதல் 31.03.2020 முடிய |
| 2. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பொட்டல் சாலைஓரம் மற்றும் நகராட்சி அலுவலக வளாகம் தென்னை மரம் மகசூல் உரிமம் | 1000/- | 01.04.2021 முதல் 31.03.2020 முடிய |

ந.க.எண்.06/2020/அ3

**தீர்மானம் எண்.2439 அனுமதிக்கப்படுகிறது**